முக்கிய வார்த்தைகள்:
*அணுகுதல்*
*சிந்தனை செய்தல்*
*பேசுதல்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**05 ஜூன் 2026 / 19 துல்ஹஜ் ஹிஜிரி 1447**

# <u>ததப்புர்: ஒரு வசனம், எண்ணற்ற வழிகாட்டுதல்கள்</u>

الحَمْدُ لِلَّهِ الَّذِي نَوَّرَ بِالْقُرْآنِ الْقُلُوبَ، وَأَنْزَلَهُ فِي أَوْجَزِ لَفْظٍ وَأَعْجَزِ أُسْلُوبٍ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ الْأَبْرَارِ، وَأَصْحَابِهِ الْأَخْيَارِ، مَا تَعَاقَبَ اللَّيْلُ وَالنَّهَارُ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. அல்லாஹ்வின் திருப்தியையும், அவன் நமக்கு வழங்கும் மன்னிப்பையும், அவனது சொர்க்கத்தையும் அடைவதற்காக நாம் செய்யும் பயணத்தை அல்லாஹ் எளிதாக்குவானாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய, ஓரிறை நம்பிக்கையின் சகோதரர்களே!**
இந்த மாதம் முழுவதிலும், திருக்குர்ஆனில் **ததப்புர்** [ஆழமாகச் சிந்தனை] செய்வதன் மூலம் அதனை **அணுகி**, அறிந்து கொள்ள வேண்டுமென,

ஜமாஅத்திலுள்ள இளையோர் மற்றும் முதியோர் என அனைவருக்கும் வெள்ளிக்கிழமை "குத்பா" பிரசங்கங்களில் அழைப்பு விடுக்கப்பட உள்ளது. திருக்குர்ஆனின் புனிதமிக்க வசனங்களை இறுதியாக எப்போது நாம் ஓதினோம்? அவ்வசனங்கள் நமது உள்ளங்களுடன் நேரடியாகப் **பேசுவதாக** எப்போது நாம் உணர்ந்தோம்? என நம்மை நாம் கேட்டுக் கொள்ளும் கேள்வியின் மூலம் இன்றைய பிரசங்கம் ஆரம்பமாகிறது.

நம்மில் சிலர், திருக்குர்ஆன் நம்முடன் நேரடியாகப் **பேசுமா?** அதற்கு வாய்ப்புள்ளதா? என ஆச்சரிப்பட்டு கேட்க வாய்ப்புள்ளது. எனது அன்பிற்குரிய சகோதரர்களே, இக்கேள்விக்கானப் பதிலை, திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் ஓதி, இந்த வசனம் நம்மோடு எவ்வாறு தொடர்புடையதாக உள்ளது? இவ்வசனங்களின் மூலம் எத்தகையப் பாடங்களைப் பெற்று, நமது அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தலாம்? எனச் சிந்திப்பதன் மூலம் பெற முடியும்: இதுதான், **ததப்புர்** என்பதன் உண்மையானப் பொருளாகும்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!

திருக்குர்ஆனில், 6,200 வசனங்களுக்கும் அதிகமான வசனங்கள் காணப்பட்ட போதிலும், சுருக்கமான மூன்று வசனங்களை மட்டும் இன்றைய பிரசங்கத்தில் எடுத்துரைக்கப்பட உள்ளது. திருக்குர்ஆனை **ததப்புர்** மூலம் அணுகும் முறை உண்மையில் எவ்வளவு சிறப்பானது என்பதை எடுத்துக் காட்ட அவை போதுமானவையாகும்.

வாருங்கள், திருக்குர்ஆனில், மிகவும் முதலாவதாக அருளப்பட்ட வசனத்திலிருந்து துவங்குவோம்' அதுதான் "அல்-அலக்" எனும் அத்தியாயத்தின் ஆரம்ப வசனமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

ٱقْرَأْ بِٱسْمِ رَبِّكَ ٱلَّذِى خَلَقَ ﴿١﴾

பொருள்: ”யாவற்றையும் படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக”

எனது அன்பிற்குரிய சகோதரர்களே, தற்போது ஓதப்பட்ட வசனத்தை வெறும் அதன் மொழிபெயர்ப்பின் மூலம் **அணுகினால்**, அதன் மூலம் ஒரேயொரு பாடத்தை மட்டுமே நாம் பெற முடியும்; அதுதான், ஓதுவதற்கு முன்பாக *பிஸ்மில்லாஹ்* எனக் கூறிக் கொள்ள வேண்டும் என அல்லாஹ் நமக்குக் கட்டளையிடுவதாகும்.

எனினும், இவ்வசனத்தை நாம் **ததப்புர்** மூலம் **அணுகினால்**, பின்வரும் பல கேள்விகளைக் கேட்க நாம் முற்படுவோம்:

**இவ்வசனத்தில் அல்லாஹ்வின் முதல் கட்டளை ஓதுவீராக! படிப்பீராக என்று உள்ளது; ஏன் வணங்குவீராக! ஸஜ்தா செய்வீராக, [அதாவது சாஷ்டாங்கம் செய்வீராக] என்றில்லை?** என நாம் கேட்கலாம். இக்கேள்விக்கானப் பதில்: இஸ்லாம் கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட மார்க்கமாகும்; ஆழமான, உறுதியான புரிதல் இல்லாமல் நாம் வணங்கும் வணக்கம் சரியானதாக இருக்க வாய்ப்பில்லை என நமக்கு நினைவூட்டுவதே இதன் நோக்கமாகும்.

**கல்வியறிவற்ற ஒருவருக்கு படிக்குமாறு அல்லாஹ் ஏன் கட்டளையிடுகிறான்?** எனவும் நாம் கேட்கலாம். இக்கேள்விக்கானப் பதில்: இது அல்லாஹ்வின் மகிமையையும் அவனது புகழையும் நமக்கு நினைவூட்டுவதாகும்; ஒரு படிக்காத மனிதரை, மனிதகுலம் இதுவரைக் கண்டிராத மாபெரும் ஆசிரியராக ஆக்கும் ஆற்றலை அல்லாஹ் பெற்றுள்ளான் என நினைவூட்டுவதாகும்.

**இவ்வசனத்திலுள்ள அந்த முதல் கட்டளை, அல்லாஹ்வின் திருநாமத்தோடு தொடர்புடையாக ஆக்கப்பட்டுள்ளதே ஏன்?** எனவும் கேட்கலாம். இக்கேள்விக்கானப் பதில்: ஒவ்வொரு கல்வியறிவையும் நாம்

பெற முயற்சிக்கும் போது, *பிஸ்மில்லாஹ்* எனக் கூறி ஆரம்பிப்பது அவசியமாகும் எனவும், அனைத்து வகையானக் கல்வியறிவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே நமக்கு வழங்கப்படுகிறது எனவும், கல்வியைத் தேடும் முயற்சியானது, இறைவனைப் பற்றிய சிந்தனை மற்றும் அவன் விஷயத்தில் நேர்மையாக நடந்து கொள்வது ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் எனவும் நினைவூட்டுவது இதன் நோக்கமாகும்.

**ஓதுமாறும் படிக்குமாறும் கட்டளையிட்ட பின்பு, உடனடியாக படைப்பைப் பற்றி அல்லாஹ் ஏன் கூறுகிறான்?** எனும் கேள்வியும் இங்கு எழலாம். இதற்கான பதில்: கல்வியறிவு முதற்கொண்டு, உலகின் அனைத்து படைப்புகளையும் படைத்தவன் அல்லாஹ் தான் என நினைவூட்டுவது இதன் நோக்கமாகும்.

எனவே தான், மேற்கண்ட வசனத்தை அடுத்த இரண்டாவது வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

خَلَقَ ٱلْإِنسَٰنَ مِنْ عَلَقٍ ۝٢

பொருள்: "அலக்" [இரத்தக் கட்டியிலிருந்து] மனிதனை அவன் படைத்தான்"

**"அலக்" எனும் இரத்தக் கட்டியிலிருந்து நம்மைப் படைத்ததாக அல்லாஹ் ஏன் கூறுகிறான்?** எனும் கேள்வியும் எழலாம். இதன் பதில்: இது அல்லாஹ்வின் மகிமையைச் சுட்டிக் காட்டுவதற்காகும்; அதாவது, இரத்தக் கட்டி எனும் ஒரு முக்கியமற்ற பொருளிலிருந்து அல்லாஹ் நம்மை வடிவமைத்து, குறிப்பிடத்தக்க திறன்களைக் கொண்ட ஒரு படைப்பாக உருவாக்குகின்றான். தனது ஆற்றல் மற்றும் வழிகாட்டுதல் மூலம் அல்லாஹ் நமக்கு மரியாதை செய்துள்ளான்; அறிவாற்றலை நமக்கு வழங்கி, மனிதனாக இருப்பதற்கான கண்ணியத்தையும் வழங்கியுள்ளான் என்பதையும் சுட்டிக் காட்டுவது இதன் நோக்கமாகும்.

அதன் பின், "அல்-அலக்" எனும் அத்தியாயத்தின் 3-வது வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

ٱقْرَأْ وَرَبُّكَ ٱلْأَكْرَمُ ٣

பொருள்: "ஓதுவீராக; உம் இறைவன் மாபெரும் கொடையாளி ஆவான்"

**இவ்வசனத்தில் ஓதுங்கள், படியுங்கள் என இரண்டாவது முறையும் அல்லாஹ் கூறக் காரணமென்ன?** எனும் கேள்வியும் எழலாம். இதன் பதில்: கல்வியைத் தேடுவது அவசியம் எனும் செய்தியை பலப்படுத்துவது இதன் நோக்கமாகும்; திருக்குர்ஆனில் முதலாவதாக அருளப்பட்ட வசனங்களிலேயே கல்வியைத் தேடுவது அவசியம் என அல்லாஹ் மீண்டும் கூறியுள்ளதன் மூலம், படித்து கல்விமான்களாக ஆகுங்கள்; அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை, கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டதாக ஆக்குங்கள் என அல்லாஹ் கட்டளையிடுவது போல் உள்ளது. ஏக இறைவனாகிய அல்லாஹ்விடம் நம்மை நாம் ஒப்படைத்துக் கொள்வதற்காக, நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாட்டுச் செயல்கள் மற்றும் இறை பக்தி ஆகியவற்றுக்கு கல்வியறிவு அடிப்படையாக இருப்பது அவசியமாகும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

இவையெல்லாம் திருக்குர்ஆனை, **ததப்புர்** மூலம் அணுகுவதால் கிடைக்கும் பலன்களாகும். மேற்கண்ட வசனங்கள் மிகவும் சுருக்கமானவையாக இருந்த போதிலும் ஏராளமான பயனுள்ள நினைவூட்டுதல்களை நமக்கு வழங்குகின்றன. ஓரிறை நம்பிக்கையாளரின் உள்ளத்துடன் அழகாகவும் பயனுள்ள வகையிலும் **பேசுகின்றன**. எந்த ஓரிறை நம்பிக்கையாளரின் உள்ளமானது, திருக்குர்ஆனின் அற்புதத்துடன் தொடர்புடையதாக உள்ளதோ அவரது உள்ளத்துடனும் திருக்குர்ஆன் வசனங்கள் பேசுகின்றன.

சுருங்கக் கூறின், திருக்குர்ஆனை நாம் **அணுகுவதற்கான** நான்கு வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். 1. *திலாவத்* [ஓதுதல்] 2. தஹ்ஃபீஸ் [மனனம் செய்தல்] 3. தஃப்சீர் [விளக்கவுரையை அறிதல்] 4. **ததப்புர்** [சிந்தனை செய்தல்]. இவற்றையெல்லாம், தெளிவான இரவில் நிலாவைப் பார்ப்பது போல் செயல்படுத்த வேண்டும்.

*"திலாவத்"* என்பது நிலாவை வெறும் கண்களால் பார்ப்பதைப் போன்றதாகும்; அதனை உற்று நோக்கி, அதன் அழகை அறிந்து, அதனை ரசிப்பதில் நேரத்தைச் செலவழிப்பதைப் போன்றதாகும். அவ்வாறே, திருக்குர்ஆனை ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகளை உச்சரித்து, அவனது நெருக்கத்தைத் தேடிக் கொள்கிறோம்.

*"தஹ்ஃபீஸ்"* என்பது, நிலாவை ஏற்கனவே நன்றாகப் பார்த்துள்ள ஒருவர், வானத்தைப் பார்க்காமலேயே அதன் தோற்றத்தை நினைவில் கொள்வதைப் போன்றதாகும். அவ்வாறே, திருக்குர்ஆனை மனனம் செய்துள்ள ஒருவர், அல்லாஹ்வின் வார்த்தைகளான திருக்குர்ஆனின் வசனங்களை தனது சிந்தனையில் பாதுகாத்து, அவர் எங்கு சென்றாலும் அவற்றைச் சுமந்து செல்கிறார்.

*தஃப்ஸீர்* என்பது, நிபுணர்களின் வழிகாட்டுதலின் பிரகாரம் நிலாவை ஆழமாக ஆய்வு செய்து, அதன் தோற்றங்கள் ஏன் மாறுகின்றன; அதன் பலவித நிலைகள் எப்படி நிகழ்கின்றன என்பதை அறிவதைப் போன்றதாகும். திருக்குர்ஆனுடைய வசனங்களின் பொருள்களையும், சூழல்கள் மற்றும் அமைப்புகளையும் அவை கூறும் செய்திகளையும் மிகவும் தெளிவாக நாம் அறிவதற்கு *தஃப்ஸீர்* உதவியாக உள்ளது.

**ததப்புர்** என்பதோ, நிலாவில் சிந்தனை செய்து, அதனை ஆய்வு செய்து அறிவதைப் போன்றதாகும். நிலா உடைய ஒளியின் கீழ் நின்று கொண்டிருக்கும் ஒருவர், *இந்தப் பார்வையின் மூலம் எதை நான் கற்றுக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் விரும்புகிறான்?* என தன்னைத் தானே

கேட்டுக் கொள்வதைப் போன்றதாகும். மேலும், நான் எவ்வளவு சிறியவனாக இருக்கின்றேன்; அல்லாஹ் எந்தளவு பெரியவனாக இருக்கின்றான்; நேரங்கள் எவ்வளவு வேகமாகக் கடந்து செல்கின்றன; இவ்வுலக வாழ்க்கையின் உண்மையான நோக்கம் என்ன? என அவர் அறிந்து கொள்வதைப் போன்றதாகும். இவ்வாறுதான், ஆரம்பத்தில் ஓதப்பட்ட திருக்குர்ஆனின் "அல்-அலக்" எனும் அத்தியாயத்தின் முதல் மூன்று வசனங்களில் **ததப்புர்** [அதாவது சிந்தனை] செய்து, அவற்றை நாம் அறிந்து கொண்டோம்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

நமக்கு நேரமும், நீண்ட ஆயுட் காலமும் வழங்கப்படுவதற்கும், **ததப்புரின்** சிறப்பை நாம் அனுபவிப்பதற்கும், அதன் உடன்பாடான தாக்கம் நமது வாழ்க்கையில் ஏற்படுவதற்கும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் பணிவாகவும் மனப்பூர்வமாகவும் வேண்டிக் கொள்வோமாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاعْتِدَاءَ. اللَّهُمَّ إِنَّا نَسْتَوْدِعُكَ أَنْفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ.

اللَّهُمَّ يَا مُنْزِلَ الْكِتابِ، وَيَا مُجْرِيَ السَّحابِ، وَيَا هازِمَ الأَحْزابِ، اهْزِمِ الأَحْزَابَ، وَانْصُرْ إِخْوَانَنا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكانٍ عامَّةً، يا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يا رَبَّ العَالَمِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.